தமிழர் நினைவேந்தல் அகவம் - சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil
www.maveerarnaal.ch trfswiss@gmail.com

**9 வயதுப்பிரிவு**
(01.01.2009 – 31.12.2009 வரையில் பிறந்தோர்)

## நடுகல் நாயகர்கள்

'நடுகல்' என்பது தமிழர் பண்பாட்டோடும், வீரவரலாற்றோடும் பின்னிப்பிணைந்தது. இறந்தவர்களுக்கு நடுகல் அமைப்பது உலக வழக்காக இருந்தபோதும் தமிழர்களாகிய எமக்கு அது தனித்துவமான வரலாற்று அடையாளம். விதியின் வழியே சாவினைத் தழுவிக் கொண்ட மனிதர்களுக்காக நாம் நடுகல் நாட்டவில்லை.

தாய்மொழி போற்றி, தமிழ்க்கலை வளர்த்து, பொருண்மிய வளங்களை மேம்படச் செய்து, பண்பாட்டு வாழ்வை பற்றுடன் காத்து பாரினில் நாங்கள் உயர்ந்து நிற்க தனியரசு அமைத்திடும் சத்திய வேள்வியில் ஆகுதியாகிய மாவீரத் தெய்வங்களுக்கு நடுகல் நாட்டினோம்.

அவர்கள் வீரத்தின் அடையாளமாக அவர்களின் பெருமைகளை நடுகல்லிலே பொறித்தோம். ஆண்டுதோறும் அவர்கள் நினைவுகளை மீட்டோம். எங்கள் தேசத்தின் காவலர்களாக காந்தள் மலர் சொரிந்து வணங்குகின்றோம். நடுகல் நாயகர்களாக என்றென்றும் போற்றுவோம்.

வாழ்கின்ற காலமெல்லாம் எமக்காக வாழ்ந்து சாகின்ற வேளையிலும் தம் தலைமுறையைக் காத்தவர்கள். இவர்கள் சொற்களில் அடங்காத வல்லமைகள். தமிழரெம் தலைகள் நிமிர, நிலைகள் உயர தங்கள் உயிர்கள் கொடுத்தவர்கள்.

தலைவர் மாமா காட்டிய வழியின் தடைகள் உடைத்தவர்கள். விழிகள் மூடும் கணங்கள் வரைக்கும் விடுதலை நெருப்பைச் சுமந்தவர்கள். வீரம் அவர்கள் உருவில் கண்டோம். அலைகள் என்ன மலைகள் கூட தடைகள் இல்லை அவர்க்கு! தேசம் கடந்தும் எங்கள் வீரர் பெருமை வையகம் அறியும்.

நடுகல் நாயகரே! எம் இனத்தின் காவலரே! வீரத்தின் தீரர்களே! தலைவர் மாமா வளர்த்த அக்கினிக் குஞ்சுகளே! விடுதலை வேண்டி வித்தாகிப் போனவரே! உங்கள் தியாகந்தன்னை நெஞ்சில் நிறைக்கின்றோம். வல்லமை தாருங்கள். தலைகள் தாழ்த்தி உறுதி எடுக்கிறோம். தமிழீழம் மீட்டு உம் புகழ் பாடுவோம்.

நன்றி,

வணக்கம்.